1981 மார்ச் 6]

திரு. என். வரதராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை நகரத்தில் குடிதண்ணீர் அபிவிருத்தித் திட்டம் பற்றி அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். ஆனால் இப்பொழுது மதுரை நகரத்திலே கடுமையான குடி தண்ணீர் தட்டுப்பாடு நிலவுகிறது. மின்சார வெட்டின் காரணமாக இது மேலும் கடுமையாக உள்ளது. மதுரை நகராட்சி சபையே நீரேற்றுக் கி ணறுகளுக்கு ஜெனரேட்டர் பொருத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்தக் கிணறுகளுக்கு ஜெனரேட்டர்களைப் பொருத்தி தற்போது இருக்கக் கூடிய தண்ணீர் பஞ்சத்தைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழ் மாநாட்டை ஒட்டி செய்த ஏற்பாட்டின் மூலமாக அவ்வளவு தட்டுப்பாடு இருக்காது என்று அரசு கருதுகிறது. என்றாலும், மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தின் மீது மதுரை மாநகராட்சி மேயர் அவர்களைக் கேட்டு, ஆவன செய்ய அரசு முயற்சி எடுக்கும்.

கூவம் நதியின் துர் நாற்றத்தைப் போக்கும் திட்டம்.

*வினா என் 411—திருவாளர்கள் ரா. இருஷ்ணன், சீ. சிவப் பிரகாசம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் கூவம் துர்நாற்றத்தைப் போக்க அரசின் நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : சென்னை நகரின் கழிவு நீர் கூவம் நதியில் கலந்து அதை அசுத்தப்படுத்துவதை கட்டுப் படுத்தவும் தடுக்கவும் அரசு ஆணைப்படி சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் கழிவு நீரகற்று வாரியம் நகரின் பல்வேறு பகுதி களிலிருந்து கூவம் ஆற்றில் கலக்கும் கழிவு நீர் நிலை பற்றி விவரமாக ஓர் ஆய்வு நடத்திஅதனைத் தடுத்து கட்டுப்படுத்துவதற்கான வழி முறைகளை ஆராய்ந்து அதன்படி கீழ்க்கண்ட செயற் பணிகள் திட்டமிடப்பட்டு படிப்படியாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

(1) கூவம் ஆற்றில் கலக்கும் கழிவு நீர் நிலைகளை மாற்றி அமைத்து நகரின் புறப்பகுதியில் கொடுங்கையூர், கோயம்பேடு, நேசப்பாக்கம், மற்றும் பெருங்குடி ஆகிய 4 இடங்களிலுள்ள புல் பண்ணைகளுக்கு தனி நீரேற்றுக் குழாய்கள் மூலம் திருப்பி விடுதல்.

(2) நகரிலுள்ள கழிவு நீரேற்று நிலையம், மற்றும் கழிவு நீரேற்று குழாய்களில் கொள்ளளவு மற்றும் செயல் திறனை அதிகப்படுத்துதல்.

திரு. சீ. சிவப்பிரகாசம் : எடுக்கப்படும் நடவடிக்கைகள், முந்திய அரசாங்கம் எடுத்த கூவம் சீர்திருத்த நடவடிக்கைகள் போல் அல்லாமல் சிறப்புடையதாக இருக்க அரசாங்கம் சிறப்பு கண்காணிப்பு நடவடிக்கைகள் எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : எடுக்கும் செயல்கள் பயன் உள்ளதாக இருக்கும்படி அரசாங்கம் பார்த்துக் கொள்ளும்.

திரு. சி. கோபால் : கூவத்தின் துர்நாற்றத்தை நீக்க கூவம் ஆற்றைச் சுற்றி சிமென்ட் பைப்களால் மூடிவிடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா? அப்படியிருந்தால் வீராணம் திட்டம் கைவிடப்பட்டு வெயிலிலும் மழையிலும் கிடக்கிற சிமென்ட் பைப்களை பயன்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இந்த அரசு என்ன செய்ய இருக்கிறது என்பதைப் பற்றி நான் ஏற்கனவே படித்து விட்டேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் ஆலோசனை பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 412, 413, 414, 415 மாண்புமிகு அமைச்சர் அவர்களின் உடல்நிலை சரியாக இல்லாததால் ஒத்தி வைக்கப்படுகின்றன.

பத்திரிகையாளர்களுக்கான 3 வது ஊதியக்குழு.

குறுகிய கால வினா எண் 9—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பத்திரிகையாளர்களுக்கு 3-வது சம்பள கமிஷன் சிபாரிசுகளை அமுல் நடத்த அரசு இதுவரை என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது ?

(ஆ) அமுல் நடத்த நடவடிக்கை எடுக்கும்படி மத்திய அரசிடம் இருந்து தாக்கீது ஏதேனும் வந்ததா ?

(இ) ஆம் எனில் மேல் நடவடிக்கை என்ன எடுக்கப்பட்டுள்ளது ?